திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் எல்லா கிராமங்களுக்கும் பஸ்கள் சென்று வருகின்றன. ஆனால் பஸ் போக முடியாத சாலைகள் உள்ள இடங்களில் அரசே சிறிய வேன்களை நியமித்து, அரசால் இயக்கப்படுமா .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும் வினா எண் 28. திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

28—

தென்னாற்காடு மாவட்டம், சாரம் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குதல்

*9872—திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்:—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இலாபத்தில் இயங்கச் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) இலாபத்தில் இயங்க அரசு எல்லாவித நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகள் நஷ்டத்திலே இயங்குவதற்குக் காரணம் என்னவென்று நான் அறிய விரும்புகிறேன். இந்த நூற்பாலைகளில் நிர்வாக இயக்குநர்களாக வருவாய்த்துறை அதிகாரிகள் நியமிக்கப்படுவதன் காரணமாகத் தான் நஷ்டங்கள் ஏற்படுகின்றது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : அன்பார்ந்த...... (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரவு நேரத்தில், பொதுக் கூட்டத்தில் பேசுவது போல் பேசினால் எப்படி ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. இதில் அதிகமான நூற்பாலைகள் 1958 முதல் 1988-க்குள் ஏறத்தாழ 30 ஆண்டு காலத்திற்கு முன்பாக துவக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அதை 'டைம்லி மாடர்னைசேஷன்' குறிப்பிட்ட நேரத்தில் அதை நவீனபடுத்தாத காரணத்தினால்தான் ஏற்பட்டிருக்கின்ற சட்டச் சிக்கல். இரண்டாவது கடந்த ஜனதா ஆட்சியின் பொழுது ஏற்பட்ட ஏற்றுமதிக் கோளாறு. ஏற்றுமதிக் கோளாறு என்றால், நம்மிடத்தில உற்பத்தியாகாமலேயே பஞ்சை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் காரணமாக உள்நாட்டில் பஞ்சு விலை உயர்ந்தது. பஞ்சு விலை உயர்ந்ததே தவிர, அந்த அளவிற்கு நூல் விலை உயர்ந்ததா என்றால் நூல் விலை உயரவில்லை. ஆதலால் ஆலைகள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஆந்திராவிலும், இதே போன்ற காரணத்தினால் கூட்டுறவு நூற்பாலைகள் பல மூடப்பட்டு விட்டன. தமிழகத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மிகவும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண் போகாமல் இருக்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தான், புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்ினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் தான் பல ஆண்டுக்காலமாக நலிவு அடைந்த ஆலைகளை உடனடியாக நவீனபடுத்த வேண்டும் என்ற காரணத்தினால் 7 கோடி ரூபாயை ஆட்சிக்கு வந்தவுடன் நிதிநிலை நெருக்கடியிலே கூட, 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இப்போது என். சி. டி. பி.—யில் கடன் உதவி பெற்று

[1993 பிப்ரவரி 9

அனைத்து ஆலைகளையும் நவீனபடுத்த வேண்டும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் குறிப்பாக சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மின்வெட்டு 3 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. 3 ஆண்டு வட்டி இல்லாத கடன் மற்றும் வரிச்சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. காசு கடன் 120 லட்சத்திலிருந்து 150 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு சலுகைகளைத் தந்து இந்த நூற்பு ஆலைகள் லாபத்தினை ஈட்டி தருவதற்காக வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு தலைவர் அவர்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 29, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

29—

வெள்ளித்திருப்பூர்— ஆலாம்பாளையம் சாலையைப் பழுது பார்த்து அகலப்படுத்துதல்

* 10937—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, வெள்ளித் திருப்பூரில் இருந்து ஆலாம்பாளையம் வரை உள்ள சாலையைப் பழுது பார்த்து அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலையை பழுது பார்க்க சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு நிறைந்தவராய், நாள் நிறைந்தவராய், ஒப்புயர்வு நிறைந்தவராய், கண்ணோட்டம் நிறைந்தவராய், வாய்மை நிறைந்தவராய், கல்வி கேள்விகளில் சிறந்தவராய், அறிவால் உயர்ந்தவராய், ஆக்கத்தால் மேம்பாடு கண்டவராய், தனக்கென்று வாழாமல், இந்த தமிழ்ச் சமுதாயத்திற்காக வாழ்கிற ஒப்பற்றத் தலைவி புரட்சித்